SUBORDINATE COURT, PADMANABHAPURAM
CASE NO.SC.258/2017
Deposition of P.W.9

Name : அஜித்
S/o, D/o, W/o :
Caste :
Religion :
Village :
Taluk :
Calling :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of
**Dated:14.12.2022**

**முதல் விசாரணை**

நான் வண்டாவிளையில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது. அது அ.சா.ஆ.5. மேற்படி கையொப்பத்தை தக்கலை காவல் நிலையத்தில் வைத்து பல வருடங்களுக்கு முன்பு போலீசார்கேட்டு கொண்டதற்கு இணங்க கையொப்பம் இட்டேன். நான் கையொப்பம் இடும் போது அதில் எழுதப்பட்டிருந்ததா இல்லையா என்பது எனக்கு தெரியாது. எதற்காக கையொப்பம் வாங்கினார்கள் என்பது எனக்கு தெரியாது. போலீசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்யவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதிக்க கோரி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை-

24.8.2012 ம் தேதி தக்கலை காவல் நிலைய குற்ற எண் 972/12 வழக்கின் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு தக்கலை காவல் ஆய்வாளர் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும் மணிகண்டன் என்பவரும் சாட்சியாக கையொப்பம் இட்டோம் என்றும் போலீசார் என்னை விசாரணை செய்த போது கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து பொய்சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.